B

**அறிவித்தல்**

காலி, போப்பே, நாதுகொடவத்த, 118/24 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திரு.வை.எஸ்.எஸ். கொஸ்தாவின் பிள்ளை கா/ரிச்மன்ட் கல்லூரிக்கு அனுமதிக்கப்படாமை தொடர்பில் நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்சுமான்) முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டை விசாரித்து, முறைப்பாட்டாளரின் பிள்ளையை கா/ரிச்மன்ட் கல்லூரிக்கு அனுமதிக்குமாறு ஒம்புட்சுமானால் செய்யப்பட்ட விதப்புரை அமுல்படுத்தப்படாமையினால், தமது விதப்புரைகளை நடைமுறைப்படுத்துமாறு சனாதிபதி செயலாளரினால் அமைச்சரவை செயலாளர்களுக்கு வெளியிடப்பட்டுள்ள 2014.10.10ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம், அமைச்சரவை நிருபமொன்றை சமர்ப்பிக்குமாறு கல்விச் செயலாளருக்கு அறிவித்துள்ளமை பற்றி தெரிவித்து, நிருவாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரினால் (ஒம்புட்சுமான்) 1994 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க நிருவாக நடவடிக்கைகளுக்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் 17(3) (இ) பிரிவின் கீழ், எனக்கு அறிக்கையொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தர விரும்புகின்றேன்.